ஸ்ரீ:

Regd. No. M. 4456.

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி

ஸம்ரக்ஷிணீ

ஸம்புடம் 6] [ஸஞ் 5



ஸுபானு 1943

வைகாசி மே

போஷகர் வருஷ சந்தா ரூ. 1—0—0

ஆயுள் சந்தாதாரர் ரூ. 50

விஷய அட்டவணை.

1	வரதக்ஷிணை	276–278
2	திருமலையின் திருநாமங்கள் (இதன் தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம் பார்க்க.)	279
3	உடையவர் ஸம்பந்தம்	280–283
4	ஸ்த்ரீகள் பகுதி, மாலைக்கழகம்	284–287
5	மால்கொண்ட மால் (ஸ்ரீவைகுண்டாசாரியர், தில்லைஸ்தானம்.)	288–290
6	ஸ்ரீ ஸம்ரக்ஷிணீ விஜயம்	291–295
7	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	296–297
	,, (ராப்பர் 4-ம் பக்கம் பார்க்க.)	
8	ஸ்ரீராமபட்டாபிஷேகம் (ராப்பர்)	2

ஸம்ரக்ஷிணீ தில்லைஸ்தானத்தை ஸ்தானமாகக்கொண்டபின் பொருளுதவி செய்தவர்கள் 1942 முதல்

1 ஸ்ரீ பரமபரி அழகியசிங்கர் ஸ்ரீஅகோபிலமடம் ரூ. 50

2 ஸ்ரீமான் நரஸிம்ம அய்யங்கார் ரிடையர்டு ப்ரஸ்டு ஆபீஸர், கணபதிநகர், தஞ்சாவூர். ரூ. 50

3 ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அட்வகேட், மதுரை. ரூ. 50

... மான் C. விஜயராகவாசாரியர், ... 50

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUN 1943
MADRAS

ஸ்ரீ:

"ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ"

(ஓர் மாதப் பத்திரிகை.)

ஜீவநம் ஜநதாம் ஜீயாத் திவ்யமதஸ்ய ச ।
ஸ்வதநம் ஸர்வதந்த்ரேஷு வேதாந்தார்யாஹ்வயம் மஹ: ॥

ஸம்புடம்.	ஸுபாநு வைகாசி மீ	ஸஞ்சிகை
6		5

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ।

வரதக்ஷிணை.

உதார: வ்ருஜா ஜநகவத் தவ தேசிகேந்த்ரை:
பத்ராத்மிகா: ஸகலா ப்ரணயிநோ நா: ।
தேப்ய: ஸதாம் மஹித மோஹவிசேஷ விசேஷ
மாங்கல்ய ஸூத்ரமிவ வி ... கிங்கரத்வம் ।

(ப்ரபோ) தகப்பன் போன்ற ஆசார்யவர்யர்களால் (ஜனக சக்ரவர்த்திபோன்றவர்கள் என்னுமாம்) உனக்கு அளிக்கப்பட்ட பெண்கள் (பிராட்டி) போன்ற ஜீவராசிகள் அழகிய மணவாளனை உம்மால் அழைத்துச்செல்லப்பட்டு (மணம் செய்விக்கப்பெற்று) மஹான்களின் மத்தியில் மஹிமையுடன் மங்களமாங்கல்யஸூத்ரமெனும் பணி (நகை) போலே பணியை (அடிமையை) தரிக்கிறார்கள். என்று ஸ்ரீதேசிகன் சரணாகதி தீபிகையில் ஆசார்யர்கள் அடியார்களை அச்சுதனிடம் அளித்து அவனுக்கு அடிமை இவர்கள் செய்வதை பெற்றவர்கள் பெண்களை மாப்பிள்ளையிடம் ஒப்படைத்த பின் அப்பெண்கள் திருமங்கல்யத்தை தரிப்பதற்கு ஒப்பிடுகிறார். 'இதனால் தனிகர்களின் பெண்கள்' கந்யாம் கநகஸம்பந்நாம் என்கிறபடியே பல பணிகளால் அலங்கரிக்கப்பட்டு தானம் செய்யப்படினும் ஏழைகளின் பெண்கள் மஞ்சள் பூசிய மங்கள நூலை மட்டும் அணிவது மவர்கள் க்ஷேமத்திற்குப்போது

மென்று ஏற்படுகிறது. தனிகர்கள் பெண்களை அலங்கரித்துக் கொடுப்பதுமன்றி சீர் வரிசைகளையும் அவர்களின் ஸ்திதிக்கும் ஆசைக்கும் தகுந்தபடி செய்கிறார்கள். சிலர் தங்கள் தகுதியை மீறி அதிகம் செய்து அகிஞ்சனர் (ஏழை) ஆகிறார்கள். இப்படி இருக்கப்பெண்களைப் பெற்றவர்கள் சிலர் இக்காலத்துச் சட்டத்தினால் பதினான்கு வயது சென்ற பெண்களைஎங்கேயாவது மாப்பிள்ளைகளிடம் சேர்த்து விடவேண்டுமென்று தவிக்கும் சமயத்தில் அவர்களிடம் வரதக்ஷிணையைக் கண்டித்து கேட்கும் வரனைச்சேர்ந்தவர்களின் பா (ஹா)வத்தை என்னென்று சொல்வது? பையன் படிப்பில் (ஆங்கிலம்) பலபரீக்ஷைகளில் தேறி இருந்தால் இவர்களின் கடுமை அதிகம். முதல்தரமாகத்தேறிவிட்டீரோ இவர்களில் ஆடம்பரத்திற்கு அளவு இல்லை. இப்பிள்ளைகளின் படிப்பின் காரணமாய் பெண் பெற்றவர்களைப் பணம் கேட்பதற்கு எந்த சாஸ்திரம் அல்லது நியாயம் இடம் கொடுக்கும்? இவ்வரதக்ஷிணை கேட்கும் அதிகாரம் பெரும்பாலும் பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்களிடமே நிற்கின்றது. வைதிகர்களில் சிலர் பிள்ளைகளை ஆங்கிலப்பயிற்சிக்கு அனுப்புவதுகூட அப்பிள்ளைகளின் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் சீர் வரிசை வரதக்ஷிணை வரவேண்டுமென்ற அவாவினால் நிர்பந்திப்பதே காரணமாகும். பரம்பரையாய் வேதாத்யயநம் பண்ணும் வம்சத்தில் பிறந்த சிலருக்கு இவ்வாங்கில பரீக்ஷையில் தேர்ச்சி சிறிதுமின்றி ஒவ்வொரு வகுப்பிலும் பல வருஷங்கள் படித்து முதல் பரீக்ஷையில் கடைசியாய்த் தேறி இதற்கான செலவையெல்லாம் பெண் கொடுப்பவரைக்கொடுக்கவேணுமென்கிறார்கள். இதைவிட ஆச்சர்யமும் வெட்கக்கேடும் வேறுண்டோ? ஓர் பெண்ணைப் பெற்றவர் அவர் ஆசைக்கும் சக்திக்கும் தகுந்தபடி சீர் செய்துகொடுக்கிறேன் என்றால் தனிப்பணம் பறிப்பதற்கு தயாராயிருக்கும் தாயார் முதலானவர் செயலுக்கும் வழிபறிக்கொள்ளைக்கும் வாசி உண்டோ? அப்பெண்களால் ஏற்படும் உதவியும் பெருமையும் புக்ககத்தாரைச் சார்ந்ததுதானே. பெண்களுக்கன்றோ இவர்கள் பெரிதும் துணிகளையும் மணிகளையும் பணிகளையும் பண்ணிக்கொடுக்கவேண்டும். இவர்களுக்கு பணி (அடிமை) செய்ய வரும் பெண்ணுக்கு இவர்கள் பணிசெய்து அளிப்பது உசிதந்தானே. கிருஹலக்ஷ்மிபோல்வரும் பெண்ணை

வரவேற்றுக் கண்கலங்காதபடி காக்கவேண்டும். பிறந்தகத்தை நினைக்காதபடி பார்க்கவேண்டும்.

ஜாமயோ யாநி கேஹாநி ஶபந்த்யப்ரதிபூஜிதா: ।
தாநி க்ருத்யா ஹதாநீவ விநஶ்யந்தி ஸமந்தத: ॥

நாட்டுப்பெண்கள் ஆதரவு பெறாது புக்ககங்களை சபித்தால் அவைகள் சூன்யம் வைத்த கிருஹங்கள் போல் அழிந்துவிடும் என்றல்லவோ முன்னோர்கள் முதுமொழி. இப்பெண்கள்தானே க்ருஹயோகக்ஷேமங்களை வகிப்பது. அதிதிகளை ஆதரிப்பது, ஔபாஸநம் முதலிய அவசிய காரியங்களை நடத்திவைப்பது, முத்து முத்தாக குழந்தைகளை ஈன்று வம்சத்தை வாழையடி வாழையாக வாழ வைப்பது, வீட்டிற்குப் புருஷர்கள் ஈட்டிய பொருள்களை சிந்தாமல் மங்காமல் சேமித்து வைப்பது, வெளியில் அலைந்துவரும் புருஷனை வரவேற்று விசிறிகொண்டு வீசி விச்ராந்திசெய்து செய்துவைப்பது, முதலிய விவேக கார்யங்களுக்கு விசேஷமாய் உதவிசெய்பவர்கள். ஆகையால் பணத்தையின்றி குணத்தையே விரும்பி நல்ல பெண்களை நாடி அவர்கள் இருக்குமிடம் தேடிச்செல்வதே பிள்ளைகளின் பெரியோர்களின் பணியாகும். விவாஹத்தில இப்போது "வரப்ரேஷணம்' என்று ஓர் வைதிக கார்யம் நடக்கிறது. அதில் நல்ல பெண்ணை பார்க்கும்படி நான்கு பெயரை மந்திரபூர்வகமாக வரித்தனுப்புவது நடைபெறுகின்றது. இதனால் பிள்ளைகளைப் பெற்றவரே பெண்களைத்தேடவேண்டுமென்று ஏற்படவில்லையா? இப்படி இருக்கப் பெண்கள் வலுவில் வந்தாலொழிய விவாஹம் பண்ணுவதில்லையென்று இருக்கும் பிள்ளைகளுக்கு அதற்குரிய வயதுகடந்து இதற்கு என்ன காரணம் என்று பெண்களைப்பெற்றவர் கேட்கும் நிலை வருகிறது. சீர் வரிசைகள் அதிகமாய்க்கிடைப்பதால் அப்பெண்கள் உயர்ந்துவிடுவதில்லை. சில இடங்களில் வரதக்ஷிணை அதிகம் கொடுப்பது பெண்களின் இளப்பத்தைக் காட்டும் மதிப்பற்ற ஸாமானை விற்பவர் அத்துடன் பல சிறு பொருள்களை இனமாக கொடுப்பதுண்டு. ஆதலின் பெண்களை 'தாயைப்பார்த்து மகளைக்கொள்" என்றபடி அவர்களின் குலம் கோத்ரம் குணம் முதலியன தெரிந்து பெரியோர்கள் பிள்ளைகளுக்குத் தேடிவைப்பது கடமையாகும். அப்பிள்ளைகளும்

ப்ரியா ஹி வீதா நாரீஷ்வ தாரா: விதர்க்யதா ஜதி ।
ஹரணா த்ரு ப்ரவைஜ்ஞண்யாவி ப்ரீதிஸ்ரு ப்ரயோஜ்யயாடு ॥

பெரியோர் தேடிவைத்த பெண் என்று முதலிலும் குணத்தாலும் அழகாலும் பின்பும் பெருமாளுக்குப்பிராட்டியிடம் ப்ரீதி மேன்மேலும் மேன்மையடைந்தது என்ற வல்லீகியின் வாக்யத்தைப்பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென் வேண்டுகிறேம்.

———

(ஸம்-கா.)

திருமலையின் திருநாமங்கள்.

(திருப்புந்துருத்தி V. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், B. A.)

——:O:——

ஸ்ரீநிவாஸனுக்கு உள்ளதுபோலவே அவர் எழுந்தருளியிருக்கும் திருமலைக்கும் ஆயிரம் நாமங்கள் உண்டு. அவற்றுள் ஸ்ரீதேசிகன் தமது தயாசதக ஸ்தோத்திரத்தில் கொண்டாடும் திருநாமங்கள் வ்ருஷகிரி, அஞ்சனகிரி, வேங்கடாத்ரி, நாராயணகிரி, ஸிம்மாசலம், வ்ருஷபகிரி என்பவை. இந்தத் திருநாமங்கள் திருமலைக்கு ஏற்பட்டதற்குக் காரணங்கள் ஸ்ரீவராஹ புராணத்தில் பின்வருமாறு சொல்லப்படுகின்றன.

गिरावस्मिन् तपस्तेपे धर्मोऽपि स्वामिवृद्धये ।
तस्माद्वृषाद्रिं तं मुनयो वेदपारगाः ॥

(இந்த மலையில் தர்மதேவதையும் தன்னுடைய அபிவ்ருத்திக்காக தபஸ் செய்தார். அதனால் வேதபாரகர்களான முனிவர்கள் அதை வ்ருஷாத்ரி என்று அழைக்கிறார்கள்.)

अञ्जना च तपः कृत्वा हनूमन्तमजीजनत् ।
तदा देवाः समागत्य देवलाभ्युदयकारकम् ॥
यस्मात् पुत्रमसूतैषा तस्मादिदं गिरिम् ।
अञ्जनाद्रिम् ।

(அஞ்சனாதேவியும் தபஸ் செய்து ஹனுமானைப் பெற்றாள். அப்போது தேவர்களெல்லாம் அங்குவந்து தங்களுக்கு ஸஹாயம் செய்யப்போகிற புத்திரனை அவள் அங்கு பெற்றகாரணத்தால் அந்த மலையை அஞ்ஜனாத்ரி என்று சொன்னார்கள்.)

वेङ्कारोऽमृतबीजन्तु कटमैश्वर्यमुच्यते ।
अमृतैश्वर्यसंघत्वाद्वेङ्कटाद्रिरिति स्मृतः ॥

(வேம் என்னும் சப்தம் அம்ருதபீஜம். கடம் என்பது ஐச்வர்யம்.

தொடர்ச்சி ராப்பர் 3ம் பக்கம் பார்க்க.

ஸ்ரீ:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

உடையவர் ஸம்பந்தம்.

[கி. ராமஸ்வாமி அய்யங்கார்.]

——:O:——

'நல்வேதியர்கள் தொழும் திருப்பாதன் இராமனுசனை தொழும் பெரியோர் எழுந்து இரைத்து ஆடுமிடம் அடியேனுக்கு இருப்பிடம்' என்று ஒவ்வொரு வைஷ்ணவனும் பெருமையாய் பாராட்டிக்கொள்ளுமளவில் ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸம்பந்தம் அசேஷ ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. "உடையவர்" என்றால் சொந்தக்காரர் என்று பொருள். வடமொழியில் 'ஸ்வாமி' என்னும் பதம் தமிழில் உடையவர் என்று வழங்குகிறது. ஸ்வம் அல்லது சொத்துக்கு உடையவன் 'ஸ்வாமி'. அது போலவே உடைமைக்கு உரியவன் 'உடையவன்' நம்மையெல்லாம் உடைமையாகவுடையவராதல் பற்றி ராமானுசன் 'உடையவர்' ஆனார். அத்தனை ப்ரஸித்தமான ஸம்பந்தம் நமக்கெல்லாமுண்டென்பது ஸ்ரீபாஷ்யகாரருடைய இந்த திருநாமத்தாலேயே விளங்குகிறது. அந்த ஸம்பந்தத்தை நாம் மறவாமலிருந்து வருவதோடு அவருடைய அருளிச்செயல்களை ஓதியுணர்ந்தும், அவரனுஷ்டானங்களைப் பின்பற்றியும், முக்கரணங்களாலும் அவரிடத்தில் ஈடுபட்டும் வந்தால்தான் நாம் அவருடைமை என்பது ஸார்த்தமாகும். ஸ்வாமி தேசிகன் தம் பெருமை முழுவதும் உடையவர் ஸம்பந்தத்தாலேற்பட்டதாகவே ஸாதித்தருளியிருக்கிறார். உடையவர் ஸம்பந்தம் எப்படி நமக்கு உபகாரமாகிறதென்பதை அவருடைய திவ்ய ஸூக்திகளில் காணலாம்.

"காரணிகீர்த்தி இராமாநுசமுனி இன்னுரை சேர் சீரணி சிந்தையினோம் சிந்தியோம் இனித் தீவினையே" என்கிற அநுஸந்தானத்தால் நம்மை உடையவருடைமை என்று காட்டியருளுகிறார் ஸ்வாமி. இப்படியே 'யதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே' என்று தம் வாசகங்களுக்கெல்லாம் உடையவர் ஸம்பந்தமுண்டென்று மகிழ்ந்து பேசுகிறார். 'ப்ரணாமம் லக்ஷ்மணமுனி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம்' என்று காயிகமாக வணங்கி வாழ்த்துகிறார். இப்படியாகக் கரணத்ரய ஸாரூப்யம் தமக்கு எம்பெருமானார் விஷயத்தில் ஏற்பட்டதை அநுஸந்தித்து இனியராகிறார். இது போல் யதிராஜ ஸப்ததியிலும் இன்னும் பல இடங்களிலும் வெகு அழகாக ஸாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸாக்ஷாத் எம்பெருமானுக்கே ஸ்ரீபாஷ்யகாரரால்தான் ஏற்றமேற்பட்டதென்றே ஸாதிக்கப் பட்டிருக்கிறது. 'அஜ்ஞாநபக்ஷஸ்ய யதிக்ஷமாப்ருதோ விபாதி வம்சே ஹரித்வமக்ஷதம்' ஹரியென்கிற தத்வமும் ஒரு குறையுமில்லாமல் அக்ஷதமாக விளங்குவது இவருடைய ஸம்ப்ரதாயத்தில் தானும். 'தந்தம் யேந தயாஸுதாம்புநிதிநா பீத்வா விசுத்தம் பய: காலே ந: கரிசைலக்ருஷ்ணஜலத: காங்க்ஷாதிகம் வர்ஷதி' அருளாளனும் இவர்பால் அருள் பெற்று அவ்வருளைக்கொண்டு உலகோர்க்கு அருள்புரிகிறானே. இப்படி அநேகம் அழகான அருளிச்செயல்கள் எம்பெருமானுக்கே பெருமை கொடுத்தமைபற்றி இவருக்கு எம்பெருமானார் என்ற திருநாமம் அமைந்தது போலும்.

எம்பெருமானைப்போல் எம்பெருமான் அடியாரை வரும் எம்பெருமானார்பால் சேர்ந்த பெருமை பெறுகிறார்கள். 'அதிகம்ய ஸம்யகநகா: ஸுமேதஸ: யதிசக்ரவர்த்தி பதபத்ம பத்தனம் ஹரிபக்ததாஸ்ய ரஸிகா: பரஸ்பரம் க்ரயவிக்ரயார்ஹ தசயா ஸமிந்ததே' என்று குற்றமற்றவர்களும் மதிநலம் பெற்றவர்களுமான பகவத் பக்தர்களெல்லாம் உடையவர் திருவடிகளில் சேர்ந்து இன்புற்று வாழ்கிறார்கள். இது நம் ஆசார்யோத்தமன்

அநுபவித்துப்பேசும் 'பொலிக பொலிக'. பரஸ்பர ஹிதைஷிகளாய் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாம் திரண்டு இராமாநுசனுடைய சரணாரவிந்தம் பணிந்து வாழும் மஹிமையை மனத்துக்கொண்டு ஸ்வாமி தேசிகன் செய்த மங்களாசாஸனமாகும் இந்த ச்லோகம். இப்படி பாஷ்யகாரரைப் பெருமையாகப் பேசியதுபோலவே அவருடைய அருளிச்செயல்களையும் இணையற்ற மேன்மையுடையனவாக வெகு இடங்களில் வெகு அழகாக ஸாதித்தருளியிருக்கிறார். அபரபாஷ்யகாரராம் நம் தூப்புல் வள்ளல், இத்தூப்புல் அரந்தரன் தோன்றியிராவிடில் பெரும்பூதூர் வள்ளலுடைய வள்ளல்தனம் ப்ரகாசித்திராது. இருவருடைய கீர்த்தியும் ஒன்றாகவே உலகில் பரவியிருக்கிறது. 'யத்ப்ரக்யாபித நிர்த்த வர்த்தித நியாமப்யஸ்யதாம் யத்குணாந் ஆஸிந்தோராதிதம்ப்ரதேசகியதா கீர்த்தி: ப்ரஜாகர்த்தி ந:' என்றபடி நமக்கு ஸ்வாமியாய் விளங்கும் ஸ்ரீபாஷ்யகாரருடைய பெருமையால் நமக்கு ஸ்வாமியாய் விளங்கும் தேசிகன் பெருமை பெரிதாயிற்றும். இதையிட்டு பிள்ளையந்தாதியில் தேசிகனையே 'உடையவர்' என்று வ்யவஹரித்ததாயிற்று. 'உடையவனே அருளாய் உணர்ந்தார் தங்கள் கற்பகமே!' நமக்கு உடையவர் ஓரொருவரா? ஓரிருவரா? இருவராகிய ஒருவரா?

பாஷ்யகாரருடைய ஸம்பந்தம் பெற்றமையை அவருடைய பாஷ்யாதிக்ரந்தங்களை ப்ரவசனம் செய்து அவர் க்ரந்தங்களுக்கு பாஷ்யமிட்டும் அவர் அநுஷ்டித்துக்காட்டிய சரணாகதியென்னும் (அநாதரித்துப் போந்தமற்றையோரைப்போலல்லாது) ஒரு உயர்ந்த சாஸ்த்ரார்த்தத்தை உலகோர்க்கு உபதேசித்தும் நம்தேசிகர் பெருமான் பாராட்டியிருக்கிறார். எம்பெருமானை அடிபணிந்து ரக்ஷணம் வேண்டி நின்றபோது எம்பெருமானார் ஸம்பந்தத்தை முன்னிட்டுக்கொண்டு இறைஞ்சுவது முன்னோர்கள் காட்டியவழி 'ராமாநுஜாங்க்ரிசரணோஸ்மி' என்று ஆழ்வான் வழிகாட்டினார். எம்பெருமானார் திருவடியை ஆச்ரயித்த பேர்களுக்கு எம்பெருமானுடைய அநுக்ரஹம் நிச்ச

யம் என்பது மரபு. அந்த ரீதியில் நம் ஆசார்யோத்தமன் வெகுரஸமாக ஒரு ச்லோகம் அருளிச்செய்திருக்கிறார் ந்யாஸதிலகத்தில் 'உக்த்யா தநஞ்சயவிபீஷண லக்ஷ்யயா தே, ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநே: பவதா விதீர்ணம்। ச்ருத்வா வரம் ததநுபந்தமதாவலிப்தே, நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத॥' தேர்த்தட்டிலிருந்து அர்ஜுனனுக்கும் ஸமுத்ரதீரத்தில் விபீஷணனுக்கும் தேவரீர் சொன்ன சொற்களைக்கொண்டு லக்ஷ்மணமுனியை (உடையவரை) நம்பும்படிசெய்து அவருக்கு தேவரீர் கொடுத்த வரத்தைக்கேட்டு, அவருடைய ஸம்பந்தச் செருக்கன்றி வேறுபெருமையிலாத எனக்கு தேவரீர் அருளவேண்டும்' என்று அரங்கநகரப்பனை அடிபணிகிறார். பிதாமஹஸ்ய நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத' என்று பாடியவருக்கும் அந்த ஸம்பந்தத்தில் இவ்வளவு தெளிவும் தைரியமும் இல்லையோ என்று ஸம்சயிக்கவேண்டி வருகிறது. தேசிகன் ஸ்ரீஸூக்தி அமைந்திருக்கும் ஒரு ரீதியினால் இந்த விஷயத்தில் ஆண்டாள் அருளிச்செயலை அவலம்பித்தார் போலும் ஸ்வாமி தேசிகன். 'செம்மையுடைய திருவரங்கர் தாம்பணிக்கும்மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர், தம்மையுகப்பாரைத் தாமுகப்பரென்னுஞ்சொல் தம்மிடையே பொய்யானால் சாதிப்பாரார் இனியே' என்பது கோதையின் கதை. பெரியாழ்வாரோ பாதி ஸ்ரீபாஷ்யகாரருக்கும் பெருமாளுடைய வார்த்தை ஏற்பட்டது. இராமாநுஜனுக்கு மோக்ஷமுண்டா என்று நம்பிகள் கேட்க இராமாநுஜ ஸம்பந்திகளுக்கும் மோக்ஷமுண்டு என்று அருளிச்செய்தாராம் பெருமாள். அவ்வநுபந்தந்தான் தேசிகன் பாராட்டிப்பேசுவது. அந்த அநுபந்தம் எத்தன்மைத்து என்பதையும் பலபடியாய்க் காட்டியருளியாயிற்று இதுவன்றோ உடையவர் ஸம்பந்தம்!

ஸ்த்ரீகள் பகுதி.

மாலைக்கழகம்.

(ஸ்ரீமதி 'ஆண்டாள்' எழுதுவது.)

—0—

இப்படியொரு வெய்யிலெரிச்சாக்க என்ன வேலை செய்யறது. உஸ் உஸ்னு மூச்சு விட்டுண்டு புடவைத் தலைப்பாலே மூஞ்சியைத் தொடச்சிக்கத்தான் போது ஸரியாயிருக்கு' நல்லவெய்யிலம்மா' என்று சொல்லியவண்ணம் செங்கழுநீர் மலர்களைத்தொடுத்தாள் ஸுகந்தினி. நாலைந்து ரோஜாக்களைச்சேர்த்து இணைத்திருந்த கமலா திடுக்கிட்டு 'ஸுகந்தா! என்ன வார்த்தை சொன்னேம்மா! வெய்யிலெரிப்பதும் மழை பொழிவதும் ஸ்ரீவாஸுதேவன் ஸங்கல்பமல்லவா? அதைக் குறிச்சு முணு முணுத்த குரலில் பேசுவதே மஹாபசாரமாகுமே! வெய்யில் எரிப்பது வெய்யிற்காலத்தில்தானே' என்று புன்சிரிப்புடன் சொன்னாள். ஓர் பெரிய மாலைக்குப் பட்டு ரோஜாக்களை இணைத்திருந்த மதுரவல்லி 'ஆமாம்! இந்த லோகமே நமக்காகத்தான் இருக்குன்னு நெனச்சு நாம் பேசறம்! வெய்யில் அதிகமானா 'பாழும் வெய்யில்' என்கிறம். மழை அதிகமானா மானங்கெட்ட மானம்! நிற்கவழியில்லையா என்கிறம். காற்றடிப்பதும் கானல் வீசுவதும் ஸ்ரீகாந்தன் செயல் என்ற விச்வாஸம் வந்தால் நாம் மிகவும் அன்புடன் எதையும் ஸஹிப்போம் என்று பெரியப்பா அடிக்கடி ஸாதிப்பதுண்டு என்றாள். "ஆமாம்! ஆமாம்! கடோரமான காற்றும் மழையும் அடிக்கும்பொழுது எங்க ஆத்தில் இவாள் ஏதோ கைகுவிச்சு ச்லோகங்கள் சொல்ற வழக்கம். ஒரு ஸமயம் நான் அவாளை மழைக்கின்னு ஸ்தோத்ரம் இருக்கா என்ன என்று கேட்டேன். அதற்கு அவாள் சொன்ன பதில் என் மனஸை உருக்கியது. ஆமாம்! கடுமையான மழைக்காலத்தில் நாம்தான் வீடும் வாசலுமாக நல்ல கட்டடத்தில் ஒக்காந்திருக்கிறோம். எத்தனைபெயர் ஓட்டைவீடும் மண்டபங்களிலும் குடியிருக்கா. எத்தனை ஜனங்கள் வெளிப்பயணமாக சாலைகளில் நடந்துகொண்டிருப்பர். அவர்களுக்கு மின்னலாலும் இடியாலும் மழையாலும் ஒரு உபத்திரவமும் வாராதிருக்க ஸ்ரீ புருஷோத்தமனைப் பெரியவாள் துதித்து

"வழிபடுவது வழக்கம்." இதைக்கேட்டவுடன் என் கண்ணில் ஜலம் ததும்பியது என்றாள் சீவரம். ஸுகந்தினியின் கண்களில் நீர் போராடியது. "சீவரமாமி! நானும் தெரியாமல் நாராயணனை மறந்து பேசினேன். வைஷ்ணவன் தன் இருப்பே பிறர் ஹிதத்திற்காக என்று இருக்கும் இந்த உசந்த நிலைமை என் புத்தியிலே படவில்லை. வஸந்தா உள்ளே நுழைந்தாள்." "என்னடி தாயி! இன்னிக்கு நாழி!" என்றாள் கனகவல்லி. ஸுகந்தினி குறுக்கிட்டு "தலையைப்பார்த்தியா அம்மாமி! எடுத்துக்கட்டுன்னு கட்டிண்டிருக்கா! ஐயோ அந்யாயமே! கோணவகிடும் காணமே! அழகாக நடுநெற்றியில் வாரிப் பளபளன்னு குங்குமமும் வச்சிண்டுவிட்டாளே. நம்ப வஸந்தான்னே கண்டுபிடிக்க முடியலியே. அம்மாமி நமஸ்காரம்" என்று பரிஹாஸமாகக் கைகூப்பினாள்.

வஸந்தா "எனக்கு அந்த நாகரிக தலையலங்காரங்களில் வெறுப்பே வந்துவிட்டது. அதற்கு உங்க புண்ணியமான ஸ்நேஹமே காரணம். வரவழியிலே நம்ப வாத்தியாராத்து சக்கு, வாசல்லே நின்னுண்டு கையாலே பல்லை விஷமம் பண்ணிண்டு நின்னா. அவளிடம் மெதுவாக "சக்கு! இந்த புண்ணியமான கிராமத்திலேவந்து இப்படியெல்லாம் செய்யப்படாது. ஹாஸ்டலில் பிடித்த இந்தக் கெட்டவழக்கம் ஆயுள்முழுதுமே விடாமபோயிடும். கஷ்டப்பட்டு இதையெல்லாம் ஒழிக்கணும்னு சோன்னேன். வயஸ்ஸு பதினேழாகப்போறது. இதை ஒருவர் சொல்லவேண்டாமா. இவள் இண்டர்மீடியட் படிச்சுண்டிருந்துவிட்டா இந்தமாதிரி கூடவா செய்யணும்".

மாதர்களுக்குள் ஓர் பரபரப்பு உண்டாயிற்று. "வஸந்தா! என் கண்ணே! உனக்கு வாஸுதேவனே க்ருபைசெய்தான்!" என்றாள் ஒருத்தி. "ஆமாம்! நல்ல இடத்திலே ரெண்டு வார்த்தை சொன்னது வீண்போகவில்லை. ஸ்ரீமந் நாராயணனே அநுகூலித்து வழி நடத்திவைக்கிறான்" என்றாள் மற்றொருத்தி. பங்கஜம் சிரித்துக்கொண்டு "வெஞ்சுல வீரப்பெண் வஸந்தாவுக்கு!" என்று உரத்த குரலில் சொன்னாள். எல்லா மாதர்களும் வேடிக்கையாக "ஜே ஜே!" என்று ஒத்துக் கூச்சலிட்டனர்.

கைகளை அலம்பிக்கொண்டு பனித்துண்டம்போல் வெளுத்த சில "நந்தியாவட்டை"ப் பூக்களைத் தொடுத்த வண்ணம் வஸந்தா "ஆமாம்! நாகரீகம் நாகரீகம்னு விரும்பத்தகாத வழக்கமெல்லாம் வந்துடுத்து. பெண்பிள்ளை பள்ளிக்கூடங்களில் படிக்கும் பெண்குழந்தைகள், படிப்பு முன்னே பின்னே இருந்தாலும் நகத்தை அனவரதம் கடிக்கக் கற்றுக் கொண்டுவிடுகின்றன. நகத்தைக் கடிக்காத பெண்ணு நாகரிகமற்றவளாகவே எண்ணப்படுகிறாள். இன்னும் மாதர்களுக்கு முக்கியமான அடக்கம் என்ன காரணமோ தொலைஞ்சுபோய்விடுகிறது. துணியை ஒடம்போட ஓடம்பாய் போத்திக்கிறதில்லை எனக்கு இந்த ஊருக்கு வந்த அப்பறம்தான் இந்தக் கூச்சம் உண்டாச்சு. சித்தி அம்மா, சீவரமாமி, மதுரம் இவாளப்பாத்தா என்ன பயபக்தி அடக்கமெல்லாம் உண்டாறது" என்றாள்.

ஸுகந்தினி-நான் நேரிலே பார்த்தது. பாதிப்பெண்குழந்தைகளுக்கு வர வியாதியெல்லாம் இந்த நகத்தைக் கடிக்கிறதுனாலேதான் என்று எங்க ஹாஸ்டல் டாக்டர் ஹைமவதி சொல்லியிருக்கிறார். நகத்து இடுக்கிலுள்ள அழுக்குப் பற்களில் புகுந்து பற்களின் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கெடுத்துவிடுகிறதாம். இது காரணமாக ரத்த சுத்தியும் கெட்டுவிடுகிறதாம். இதற்காகத்தான் பற்களை ஜாக்ரதையாய் வச்சுக்கணும்னு சொல்லுவார். ஹைமவதிக்கு மாவிலைச்சாற்றில் அன்பு உண்டு. மாவிலையின் சாறு பற்களில் சேர்ந்தால் உறுதியும் முறமுறப்பும் சுத்தமும் உண்டாகிறதாம். இதனால் அவர் பல் தேய்ப்பதானால் அரைமணியாகும். பச்சைப்பசேலென்ற அந்தச் சாற்றை, வாய் நிறையக் குழப்பிக் குழப்பித் துருவித் தேய்த்தபிறகுதான் வெளிவருவார். மாவிலை கிடைக்காவிட்டால் வேப்பங்குச்சி உபயோகிப்பார். வேப்பநீர் நம் உடலிற் கலந்தால் கெட்ட கிருமிகள் பட்டு ஒழிகின்றன! வாயில் ஊறும் உமிழ்நீர் அதிகமாகிறது! ஜீரணசக்தியும் சாப்பிடும் பதார்த்தங்களில் ருசியும் அதிகமாகிறதாம். நம் பெரியோர்கள் எதற்காக மனசுக்கு பிடித்த பதார்த்தங்களாகச் சாப்பிடச்சொல்ரு. மனஸுக்கு ருசியாயிருந்தா நாக்கில் ஜலம் ஊறும். ஜலம் ஊறினா அவ்வளவும் ஜீரணோபகாரி. மனஸுக்குப் பிடிக்காத பண்டங்களை சாப்பிட்டா நிச்சயம் அஜீர்ணம்தான்.

மதுரவல்லி—ஸுகந்தா சொல்வது அத்தியாவசியமாயிருக்கிறது. பெண்பிள்ளை பாடசாலைகளிற் படிக்கும் பெண்கள் மெல்லிது மெல்லிதாய் சேலைகள் கட்டிக்கொள்கின்றனர். மெல்லிதாய் சேலை கட்டிக்கிறதே பாவமில்லை. உடம்பில் அதிக அடக்கம் ஏற்படுவது கஷ்டமாயிருக்கு; மேலும் வெளுப்பு வஸ்திரங்களை உடுத்திக்கொள்வது <u>தேசாசார விரோதம்.</u> பணச்செலவு. ஒரு வெள்ளைச் சேலை உடம்பிலே நன்னாயிருக்கணும்னு அடிக்கடி வண்ணானுக்குப் போட்டு வச்சிக்கணும். வண்ணானிடம் நாலு, ஆத்திலே நாலு இப்படி எட்டு பத்து சேலை யிருந்தாத்தான் சுத்தமாய் இருக்கலாம். அழுக்கு ஸ்வல்பமாய் பிடித்து ஆபாஸமாய் காண்கின்றன. வெள்ளைப்புடவையை அழுக்கு ஸரியாப் போகாமல் தோச்சு உடுத்திண்டமோ அந்தக் கண்றாவியைச் சொல்லமுடியாது. ஏழைகளான நாம் இப்படி பத்துப் பன்னிரண்டு சேலைகள் வச்சிண்டு வண்ணானுக்குப் போட்டுண்டு குடித்தனம் பண்ணமுடியுமா? கலர்ச் சித்தாடைகள் பட்டுச் சித்தாடைகள் உடம்பிற்கு எத்தனை பொருத்தம். எத்தனை அழகு! பன்னீர்ப்புஷ்பங்களால் திருமுடிக்கொண்டை கட்டிக்கொண்டிருந்த பங்கஜம் நல்ல பட்டுப்புடவைகள் கட்டிக்கொண்டா அழகுதான். அதற்காக நம்ம மதுரவல்லிபோல பட்டுப்பட்டாய் புடவைகளை உடுத்திண்டு, ஸரியாய் பிழிந்துபோடாமல் நான்கணைக்காக ஈரத்துடன் போட்டு வைத்து வீணாக்கப்படாது" என்றாள். வெட்கத்தைக் காட்டும் சிரிப்புடன் மதுரவல்லி" ஆமாம்! எங்காத்திலே வெறுமே பரிஹாஸம்பண்றா. குளிச்ச கையோடே புடவைகட்ட வருவதில்லை. ஸாயங்காலம் 4மணி 5மணிக்கு எடுத்து உலர்த்தினாலும் சொட்டச் சொட்டத் தண்ணீர் வடிந்து புடவை கெட்டுவிடுகிறது. "திருப்பரிவட்டத்தை அடியேனை உலர்த்தட்டுமா" என்று நாலுநாள் முந்திக் கேட்டா. கூடியவரையில் இப்போது திருவாராதனம் நடக்கும்போதே கொஞ்சம் ஒட்டப்பிழிந்து தான் உலர்த்திவருகிறேன். பட்டுப்புடவைகள் இப்படி அஜாக்ரதையால் வீணாகவே போய்விடுகின்றன" என்றாள். உடனே ஸுகந்தா புன்னகையுடன் "உங்க பெரியப்பா இந்த விஷயமாக ஒன்றும் சொல்லவில்லையோ" என மாதர்கள் யாவரும் "கொல்"லென்று சிரித்தனர்.

மதுரவல்லி ஆமாம் ஆமாம்! வைதிகமென்றால் அநாகரீகம் கலக்கப்படாதோல்லியோ! பெரியப்பா சொல்லத்தான் சொல்றா. குட்டி! நல்ல வஸ்த்ரங்களை மூலைக்குமூலை போட்டுப்பாழ்பண்றையே' என்கிறார். உடனே எங்காத்துவாளும் சேந்துண்டு பேசறா. விரக்தி முத்திக் காஷாயக்ரஹணம் வரையில் பலித்து விடுமோ என்னவோ. நல்ல சாந்தஸம்' என்னு சிரிக்கறா. வைதிகம்னா நாலு பேர் பார்த்து பின்பற்ற ஆசைப்படும்படியல்லவா நாம் காட்டிக்கொள்ளவேண்டும். கமலா. சீவரம்மாமி இவாபோல என் புடவை இல்லைதான்! கோயில் படித்துறையில் இவாள் புடவை தோய்க்கற அழகொன்றே போரும்! சீவரம் ஜபம் பண்ணச்சே மஹாலக்ஷ்மியாட்டமா இருக்கு. நெற்றித் திருமண்காப்பும் பட்டுப்புடவையும் பணிந்து பணிந்து ஸேவிப்பதும் பார்க்க வெகு அழகு. டணார் டணார் என்ற மணிச்சத்தம் கேட்டது. மாலைகள் கட்டப்பெற்றன. மாதரும் எழுந்து மாதவன் கோயில் ஏகினர்.

மால்கொண்ட மால்.

———:0:———

திருவேங்கட மலையில் பசுந்த தினைப்புனம்! நல்ல விளைவு! கிளிகளின் தொந்தரவு தாங்கமுடியவில்லை. புனங்காப்பவரோ தேவஸ்த்ரீகள் போன்ற பெண்கள்! புனத்தருகே ஓர் வழிப்போக்கன் காணப்படுகிறான்! உருவத்தில் மன்மதமன்மதனவன்! தினைக்கொல்லையில் 'ஆயோ' 'ஆயோ' என்று கிளி ஓட்டும் ஒலி கேட்கிறது. அவ்வொலியின் வன்மைதான் என்ன! அது வழிப்போக்கனுடைய மனதைக் கொள்ளை கொள்கிறது. ஸர்வேச்வரனாகிய இவ்வழிப்போக்கன் ஸர்வசக்தனாகினும் மேற்கொண்டு ஓர் அடி எடுத்துவைக்க முடியவில்லை, புனத்தை நோக்குகிறான்! கிளிகள் கூட்டங்கூட்டமாக இங்குமங்கும் பறக்கின்றன! புனங்காக்கும் பெண்கள் கூறும் 'ஆயோ' என்கிற சொல்லைக்கேட்டு பயந்துதான் அக்கிளிகள் பின்செல்லுகின்றனவோ அன்றி அவர்கள் குரலுக்கு தாம் கொஞ்சிக்கூறும் சொல்லும் ஈடாகாதென்று நாணித்

தாமேறு யாரறிவார்? இவ்வாறு அப்பெண்மணிகளின் வாயொலியைக்கேட்டு தம் செவி படைத்தபயனும், வாய முகைக்கண்டுகண்படைத்தபயனும் ஒருங்கே அடைவதாக எண்ணுகிறான் வழிப்போக்கனாகிற தலைமகன்! புனங்காக்கும் தலைவி தம் தோழிக்கூட்டம் புடைசூழ இருந்தாள். இந்நிலையைக்கண்டு தலைமகன் தன் தன்மை தவிர்ந்தான்! 'காலாழும் கண்சுழலும் நெஞ்சழியும்' என்னும் படிகளில் நிலைதடுமாறுகிறான். இவ்வழிப்போக்கனாகிற தலைமகனும் புனங்காக்கும் தலைமகளும் இதற்கு முன்பே எதிர்பாராத வகையில் ஒருவரையொருவர் கூடிப்பிரிந்தவர்களாகையால் ஒருவரையொருவர் மறந்திலர்! பிரிந்து தரித்திலர்! தலைமகனை எதிர்பார்த்தே புனங்காத்தலை மேற்கொண்ட தலைவி வழிப்போக்கனைக் கடைக்கண்ணால் நோக்கினாள்! உடனே விளையாட்டு வியாஜத்தால் தம்தோழிகளை விட்டுத் தனித்து ஓர் புறம் செல்லுகிறாள்! இப்போது தன் நெஞ்சிலோடும் எண்ணங்களைத் தலைவிக்கு அறிவிக்கும் பொருட்டு தோழிக் கூட்டத்தைப் புருஷகாரமாய்க் கொள்ளக்கருதி அவர்களை நெருங்குகிறான் தலைமகன்! ஸ்தவ்யனும் ஸ்தவப்ரியனுமான தலைமகன் அப்பெண்கள் முன்னிலையில் ஸ்தோதாவாகிறான்! 'மின்னாரும் மன்னாரும் விரும்பும் வேங்கடத்தைத் தம்மிடமாகக்கொண்டு கொடிபோன்ற எழிலுடையவர்களே!' என்று அவர்களை அழைத்துத் தன் எண்ணங்களை மறைமுகமாகச் சொல்லுகிறான்! 'என் எண்ணங்களை உங்களிடம் வெளியிடத் தகுந்த சொற்களைக் காணேன்! ஆகவே என் நெஞ்சினால் நோக்குங்காணீர்! எமக்குற்ற நோய்க்கு மருந்தறிவார் யாருமில்லையோ என்றான்!' இதைக்கேட்டு அப்பெண்மணிகள் காலின் மேலிட்டால் தலை கவிழலானார்கள்! அதைக்கண்டு மேலும் முறையிடுகிறான் 'நீங்கள் தாமாகவே என் நோயை அறியாவிடினும், நான் உரைக்கவும் கேட்கவில்லையே! ஐயோ! என் வினையின் வன்மைதானென்னே?! ஆகிலும் சொல்லுகின்றேன்! இவ்வாறு எம்மை ஈடழித்து உயிர்க் கொலை செய்வது உமக்கு அழகோதான்! எம் உயிரைக்

கொள்ளை கொடுத்தலாகிய காரியத்தை நான் உணருகிறேனேயொழிய அதன் காரணத்தை ஆராய்ந்தறியும் சக்தியை யிழந்தேன்! இப்படி என் உள்ளம் அழியும் காரணம் உங்கள் வாயின் அழகைக்கண்டதா? அல்லது இக்கிளிகளையும் எம்மையும் வாசியில்லாமல் உருக்குகிற உம்முடைய 'ஆயோ' என்கிற த்வனியைக் கேட்டதா? அதுவுமில்லாவிடில் முத்துறத்தோன்றி பாவியேனை இவ்வாறு ஈடழிக்கும் உம் கோவைப்பழம்போல் சிவந்த அதரத்தின் அழகா? இவை மூன்றும் சேர்ந்தா அல்லது தனித்தேயோ? யானறியேன்! இதைக் கருணைகூர்ந்து கூறியருள்வீர்' என்று. சிலசொற்களாகத் தலைவியின் வேறுபாட்டையும் தலைமகனது இன்றைய முறையீட்டையும் ஒற்று நோக்கி ஒருவாறு உண்மையை உணர்ந்து இருவரையும் தோழிகள் உடன்படுத்தினர். (இதில் ஸர்வேச்வரன் தலைமகனும் நம்மாழ்வார் தலைமகளுமாவார்கள்.) நம்மாழ்வாரின் பக்தி முதிர்ந்து சிருங்காரமாய் பரிணமித்திருக்கிறதுதாமான தன்மை தவிர்ந்து பிராட்டியின் நிலையை அடைகிறார். தம் உள்ளோடும் எண்ணங்கள் அழகிய பாசுரங்களாக பிரவஹித்து அகிஞ்சனதனர்களான ப்ரபந்ந லோகத்தைச் செழிப்பிக்கின்றன.

'மாயோன் வடதிருவேங்கட நாட வல்லிக் கொடிகாள்
நோயோ உரைக்கிலும் கேட்கின்றிலீர் உரையீர் நுமது
வாயோ? அதுவன்றி வல்வினையேனும் கிளியும் எள்கும்
ஆயோ? அடுந்தொண்டையோ? அறையோ இது
[அறிவு அரிதே!!'
[திருவிருத்தம் 10.]

210851

ஸ்ரீ:

ஸ்ரீ ஸம்ரக்ஷிணீ விஜயம்.

(திருப்பூந்துருத்தி V. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், B. A.)

—:O:—

வஸந்தகாலம். எங்கு பார்த்தாலும் வ்ருக்ஷங்கள் பலவிதமான வர்ணங்களையுடைய புஷ்பங்களையும் பலவிதமான இனிய பலவர்க்கங்களையும் ஏந்திநின்று, தங்கள் க்ருஹங்களை நாடிவரும் அதிதிகளை ஏற்று உபசரிக்க ஸித்தமாக இருக்கும் க்ருஹஸ்தர்களைப்போல் தோற்றமளிக்கின்றன. மாந்தளிர்களை மிகுதியும் தின்று அதனால் மதம்பிடித்தவைபோலும் குயிலினங்கள் நாற்புறமும் இனிமையாகக் கூவுகின்றன. மகரந்தச்செந்தூளாகிற சந்தனத்தைத் தன் யஜமானனுக்குப் பூசவரும் ஏவலாளனைப்போல் மந்தமாருதம் இனிமையாக வீசுகின்றது. ஜீவநதியாகிய காவேரி பன்னிரண்டு மாஸங்களும் சற்றேனும் சலிப்பின்றிப் பிரவஹித்த களைப்புத்தீரச் சிறிது விச்ராந்தி செய்துகொள்வாள் போன்று தன்னுடைய ப்ரவாஹங்கள் குறைந்து சிறுசிறு அருவிகளாக மெல்ல மெல்ல நகர்கின்றாள். அந்திச்செவ்வானம் க்ஷணத்துக்கொரு வர்ணமாக மாறிக்கொண்டு இவ்வுலகின் நிலையின்மையைக் காட்டுவதுபோலும் தோன்றுகிறது. இதற்கிடையில் மலைவாயில் இறங்கும் ஆயிரங்கிரணக் கடவுள் தம் கீர்த்தியை உலகமெங்கும் பரவச்செய்துவிட்டுத் தாம் மறைந்தாலும் பெரியோர்களின் தன்மையைக் காட்டுகின்றார்.

இந்த நேரத்தில் காவேரியின் பொன்நிறமான மணல் திட்டுகளில் இரு ரஸிகர்கள் ஆனந்தமாகப் பேசிப் பொழுது போக்குகிறார்கள்.

"ரங்கு! இந்தக் காக்ஷிகளையெல்லாம் பார்த்தாயா? இவை ஒரு முழுமூடனைக்கூட ஒரு உயர்ந்த கவியாகச் செய்துவிடும் என்று நினைக்கிறேன். என்ன அழகான

காக்ஷிகள்! என்ன ஆனந்தமான தோற்றங்கள்! இந்தக் காவேரியைப்பற்றிப் போற்றிப் பாடாத கவிகளே இல்லையெனலாம். வடமொழியிலும் தமிழிலும் பல்லாயிரக்கணக்கான கவிகளாற்பாடப்பெற்ற புண்ணிய நதியல்லவா இது" என்றான் ராகவன்.

"ஆம்! உண்மைதான். இந்தக்காவேரியும் புண்ய நதிதான். அது பாய்ந்து செழிக்கும் இந்த நாடும் புண்ய நாடுதான். இந்த நதியை ஸ்ரீசுகர் "மஹாபாகை" என்றும் ஆழ்வார் "கங்கையிற் புனிதமாய காவிரி" என்றும், ஸ்ரீதேசிகன் "கநகஸரித்" "கநகாபகை" "கவேர தநயை" என்றும், கொண்டாடுகிறார்கள். ஸ்ரீபட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் காவேரியைப் பலபடியாகப் புகழ்ந்து, எம்பெருமானுடைய திருவடிக்கமலத்தில் உத்பத்தியான ஒரே பெருமையைப் பெற்றிருக்கும் கங்கையைக் காட்டில் மற்றைத் தீர்த்தங்களையும் பரிசுத்தமாக்குவது, ஸ்ரீரங்கநாதனுடைய உத்யானச் சோலைகளை ரக்ஷிப்பது, அவரது வீதிகளையும் தெருக்களையும் நனைப்பது, ஸ்நானம், அர்க்கியம், பானம் முதலியவற்றுக்கெல்லாம் யோக்யமான தீர்த்தத்தைப் பெருக்குவது, ஸ்நானம் பண்ணியவர்களைப் புனிதமாக்குவது, ஸகல வேதங்களிலும் மறைந்திருக்கும் எம்பெருமானைத் தன்னுடைய மணல் திட்டுகளினிடையே ஸர்வஜன த்ருச்யமாகக் காட்டுவது முதலிய பல உத்கர்ஷங்களைப் பெற்றுச் சிறந்திருக்கும் காவேரியானவள் தன்னுடைய நுரைகளால் இந்த கங்கையை நோக்கிப் பரிஹாஸச்சிரிப்பு சிரிப்பவள்போலும் தோன்றுவதாக அநுபவிக்கிறார்" என்றான் ரங்கு.

ராகவன் சிரித்துக்கொண்டே, "தேவலையே! நீயும் ஒரு கவியாகிவிட்டாயே! உன் வர்ணனையைக்கேட்கும்போது எனக்குக்கூட மயிர்க்கூச்சலெடுத்து ஒரு இன்ப உணர்ச்சி உண்டாகின்றதே!" என்றான்.

ரங்கு "ராகவா! இதோபார். காவேரிக்கு இவ்வளவு பெருமையும் உண்டாகக் காரணம் என்ன தெரியுமா?"

"நீதான் சொல்லேன்"

"அடற்புள்ளரசிலும் அந்தணர்மாட்டிலும் இன்ன முதக் கடற்பள்ளி தன்னிலும் முன்னெல்லாம் திருவுள்ளமுகந்த எம்பெருமான் 'இப்போது இந்தக்காவேரியின் மத்தியிலுள்ள திருவரங்கத்தை மிகவும் ஆதரித்து இங்கேயே நித்யவாஸம் செய்தருளுவது தான்."

"உண்மைதான்"

"பெருமானுக்கும் பிராட்டிக்கும் திருப்பாற்கடலையும் பரமபதத்தையுங்காட்டில் அதிகமும் திருவுள்ளத்தையுகப்பிக்கும் ஸ்தலம் திருவரங்கமே, என்று ஸ்ரீபட்டர் திருவுள்ளம். அவர் பிராட்டியை ஸ்துதிக்கும் ஸ்ரீகுணரத்னகோசம் என்னும் ஸ்தோத்திரத்தில் 'அன்னையே! உமது பிறந்தவகம் என்று திருப்பாற்கடலை பஹுமானம் செய்கிறீர். உமது காந்தனிடம் உள்ளப்ரீதியினால் அவருடைய பரமபதத்தைச் செழிக்கச் செய்கிறீர். அடியோங்களை ரக்ஷிப்பதற்கு ஏற்ற இடம் என்கிற திருவுள்ளத்தால் பாற்கடலையும் பரமபதத்தையும் அடியோடு மறந்து ஸ்ரீரங்கமாகிற திவ்யதேசத்தில் எழுந்தருளியிருந்து திருவுள்ளமுகக்கின்றீர்." என்று அநுபவிக்கிறார்.

'பெரிய பிராட்டியார் தமது திருமகளென்றும், எம்பெருமான் தமது மாப்பிள்ளையென்றும் பஹுமானித்து அவர்களை இந்தக்காவேரி பிராட்டி உபசரிப்பதாக ஸ்ரீபட்டர் அநுபவித்துள்ளார் என்று நீ முன்னம் சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. இல்லையா?'

"ஆம் "துக்தாப்திர் ஜனக:" என்னும் ச்லோகத்தில் க்ஷீரஸமுத்திரராஜனே தகப்பனார். நானே தாயார். இந்த ஸ்ரீதேவியே எங்களிருவருக்கும் வாய்த்த திருமகள். இவளுக்குகந்த மணவாளன் ஸ்ரீரங்கநாதனே! இவர்களுடைய ப்ரபாவத்துக்கேற்றபடி நான் என்ன பண்ணக்கடவேன்" என்று எண்ணி சஞ்சலம் அடைந்தவள்போல் சாமரங்கள் பச்சைக்கற்பூரம், சந்தனக்கிளைகள், மாணிக்கக்கற்கள் முத்துச்சிப்பிகள் முதலியவற்றை சலிக்கின்ற வையும் உயர்தூக்கியவையுமான தன்னுடைய அலைகளாகிற கைகளால் ஸமர்ப்பித்துக்கொண்டும்ப்ரதக்ஷிணம் பண்ணுகிறவள்போல் நாற்புறமும் சூழ்ந்துகொண்டும் விளங்குகிற காவேரியை நான் ஸேவிக்கவேண்டும்" என்று அருளிச்செய்துள்ளார்.

"ராஜாதிராஜ:ஸர்வேஷாம்" என்றபடி ஸர்வலோக நாயகனாகிய எம்பெருமானே மாப்பிள்ளையாக வந்தால் அவருக்கு என்ன கைங்கரியந்தான் செய்யக்கூடாது; காவேரிப் பிராட்டி பெருமானுக்குத்திருவடிவருடுவதாகக் குலசேகரப் பெருமாள் பாசுரம் திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னிதிரைகையா வடிவருடப் பள்ளிகொள்ளுங்கருமணி" என்று அவர் பணிப்பு."

"காவேரி தீரத்தில் வஸிப்பவர்களுக்கும் அதில் ஸ்நானம் செய்பவர்களுக்கும் அதைத்யானம் செய்கிறவர்களுக்குங்கூட மோக்ஷங் கையிலுள்ளதாகப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அப்பப்பா! காவேரியின் பெருமைதானென்னே!

இப்போது ஒருவருஷமாகக் காவேரிக்குப் புதியதாக ஒரு பெருமை உண்டாகி யிருக்கிறதே! தெரியுமோ?

"அது என்ன"

"காவேரிக் கரையிலேயுள்ள நில்லைஸ்தானம் என்னும் ஊரிலிருந்துதான் இப்போது ஸம்ரக்ஷிணீ வெளிவருகிறது. இவ்வளவு காலமாக நமது ஸம்ப்ரதாயமென்னும் ஆசார்யன் என்னும் நினைக்காதவர்கள்கூட நாலைந்து வருஷமாக ஸம்ப்ரதாயத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள் என்றால் உலகத்துக்கு நம் ஸம்ரக்ஷிணீ பண்ணியுள்ள தொண்டு ஸாமான்யமோ? உலகத்தை ஸ்ருஷ்டித்த நாள் முதல் பகவான் பற்பல ப்ரயத்னங்களைச் செய்தும் அவதாரங்களை எடுத்தும் செய்ய முடியாத பெருந்தொண்டை நமது ஆசார்யர்கள் செய்துள்ளார்கள். இப்போது இந்த ஸம்ரக்ஷிணீ இந்தத் தொண்டினை ஆற்றிவருகிறது. ஆலோதுவிமாசலம் ஆநந்தமாயுலவிவரும் இவ்வழகிய பத்திரிகை ஆசந்த்ர தாரகம் மிகவும் பெருமையோடு விளங்கிவருமாறு அருள்புரிய வேண்டி அரவிந்தலோசனனை அர்த்திப்போம்.

இக்காவிரியைப் பற்றி ஸ்ரீதேசிகன் ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில் அருமையாக அருளிச்செய்ததனைத்தையும் சேர்த்து சென்ற வருஷம் ஸம்ரக்ஷிணியில் ஸம்பாதகர் வெளியிட்டிருக்கிறார்.

தேசிகர் ஸ்ரீஸூக்திகளாந் தேன்பெருக்கின் தீஞ்சுவை
ரஸிகர்க்குத் தந்துதவு கற்பகமே-ஆசையெலாம்[யைக்
மன்னுபுகழ் ஸம்ரக்ஷிணி மாமகளே! வாழியநீ
யின்னுமோர் நூற்றி யினிது.

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

நாடகம்.

[By Sri Vedantha Desikar]

நாடக அரங்கம் தற்காலத்தில் நவீன நாடகங்களையே கொண்டுள்ளதாயினும் பழைய நாடகங்கள் முற்றிலும் அழிந்து விடவில்லை. பழையனவென்பதால் மாசற்றவை என்றாவது புதியனவென்பதால் மாசுள்ளன என்றாவது நாடகங்களைக் கூற முடியாது. இதேகவி தான் ஸ்ரீவேதாந்ததேசிகர் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில்

तदात्वे नूतनं सर्वमायत्यां च पुरातनम् ।
न दोषायैतदुभयं न गुणाय च कल्पते ॥

என்று எழுதியுள்ளார். பழைய நாடகங்களின் அமைப்பில் முதற்காட்சியாக ஸூத்திரதாரர் என்ற புருஷரும், நடி என்ற ஸ்திரீயும் தோன்றி நாடகத்தின் தராதரங்களைப்பற்றி பேசுவது வழக்கம். இவ்வகையில்சேர்ந்ததுதான் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயமென்னு மிந்நாடகமும். இதன் ஆசிரியர், விசிஷ்டாத்வைத (ஸ்ரீ வைஷ்ணவ) மதாசாரியரும், ஸ்ரீரங்கத்திலேயே வஸித்துவந்த ஸ்ரீவேதாந்ததேசிகர் இவர் அருளிச்செய்த நாடகம், காவ்யங்கள் ஸ்தோத்திரங்கள் முதலியவை மொத்தத்தில் 116 ஆகும். எம்மதத்தினுண்மையும் போதிக்கும் இந்நாடகம் நாடக சாலாதிபனான ஸ்ரீ ரங்கராஜனிடமே, அரங்கேற்றப் பட்டது மிகவும் போற்றத்தக்கது. ஸம்ஸ்கிருதத்தில் எழுதப் பட்ட இந்நாடகம் போதிக்கும் முக்ய விஷயம் தூய நடத்தை யைக் கைக்கொள்ளவேண்டுமென்பதேயாகும். ஒருநாள் வட தேசத்தவரான ஸ்ரீ கிருஷ்ணமிச்ரர் என்பவர்எழுதிய 'பிரபோத சந்த்ரோதயம்' என்னும்நாடகம் அரங்கேற்றுவதற்காக இவரிடம் காண்பித்தார். அதனினும் சிறப்பாக அதன் நடகபாத்திரங்களையேகொண்டு எழுதியதாகுமிந்நாடகம்.

இதன் பாத்திரங்களில் முக்கியமாக இருபிரிவுகள். அதில் நற்குணங்களின் பிரிவின் அரசன் விவேகன்-அவனது ஸாரதி தர்க்கன்; ஸேனாதிபதி-வ்யவஸாயன் (உழைப்பு) சிற்பி-ஸம்ஸ்காரன். தூதன்-திருஷ்டப்ரத்யயன். விவேகனின் மனைவி ஸுமதிதேவி (நல்லெண்ணம்) விரக்தி, விசாரணை, முதிதை (ஸந்தோஷம்) க்ஷமை (பொறுமை) என்பவர்களே இவளது தோழிகள். துர்குணங்களின் பிரிவின் அரசன் மஹாமோஹன். இவனது ஸேனாதிபதி காமன்-(மன்மதன்). வஸந்தன், ராகன், த்வேஷன், லோபன், க்ரோதன் (கோபம்). டம்பன், தர்ப்பன். (கர்வம்) என்பவர்கள். இவனது மந்திரிகள். தூதன்-ஸம்வ்ருதி. ஸத்யன் மஹாமோஹனின் மனைவி. துர்மதி(கெட்ட எண்ணம்) ரதி, அஸூயை, த்ருஷ்ணை (ஆசை). வஞ்சனை இவளது தோழிகள். இவர்களைத்தவிர நாரதர் தும்புரு ஆசார்யர், சிஷ்யர், ஜீவாத்மா விஷ்ணுபக்தி, ஸங்கல்பன் ஜீவாத்மாவின் மனைவியான-புத்திஇவர்களும் தோன்றுகின்றனர். இவ்விதமாக மனிதனுடைய குணங்களையே அந்தந்த குணங்களின் அபிமான தேவதையாக்கி நமது ஆசாரியர் நாடக பாத்திரங்களை நிரூபித்துள்ளார்.

கதையின்சுருக்கம்:-மோஹனால் பீடிக்கப்பட்ட ஜீவாத்மா முதலில் அந்தபோகங்களை இச்சித்தனுபவித்து, மோக்ஷஸாம்ராஜ்யத்தையிழக்க வேண்டியிருக்கிறது. பின்னர், தெய்வ ஸங்கல்பத்தின்படி, விவேகன் முதலியோரால் மோகனுதியர் ஜயிக்கப்பட்டு, நற்குணங்களையடைந்த ஜீவாத்மா, மோக்ஷ ஸாம்ராஜ்யத்துக்குள்ள வழியை அனுஷ்டிக்கிறான். இம்மாறுதலே ஜீவாத்மாவை உய்யச்செய்யும் பகவத் ஸங்கல்பமென்ற ஸூர்யோதயமாகும்.

K. N. ஸ்ரீநிவாஸன்.

भगवतः कृष्णस्य दृष्टिदोषपरिहाराय व्रजस्त्रियः मङ्गलानि प्रार्थयन्ति—அன்று இவ்வுலகமளந்தாய் इति ।

२४ लङ्काधीशदशाननादिशमन त्वद्विक्रमो वर्धतां
वत्साख्यारिविनाशिनस्तव जगन्मातुः प्रथेतां पदे ।
तं गोवर्धनपर्वतं घृतवतश्छत्रं गुणास्ते जयन्-
त्वेतं त्वां शरणं गता वयमहो लब्धुं व्रतस्योचितम् ॥

वल्लव्यः स्वागमनकारणं कृष्णाय निवेदयन्ति—ஒருத்தி மகனாய் इति ।

२५ कस्याश्चिज्जठराद्भवान्निशि तदैवासीः परस्याः सुतः
तस्यैवं परनाशिनो व्यरचयत्कंसोऽप्रियं ते बहु ।
तत्सर्वं त्वयि निष्फलत्वमगमत् तस्मिन् भवत्यर्थिताः
प्राप्ताः स्मः पटहादिकं बहुविधं दत्वा व्रतं कारय ॥

गोपिकाः नन्दात्मजाय व्रतसाधनानि प्रार्थयन्ते—மாலே மணிவண்ணா इति ।

२६ शङ्खान् शुक्लतमान् निनादभरितान् दीपान् बहून् सुन्दरान्
किञ्चात्यद्भुतनादवादिपटहान् वेदप्रवक्तॄन् जनान् ।
अत्युच्चं ध्वजमावितानमखिलं चान्यद्व्रते माधव ।
देहि त्वं वटपत्रतल्प जलदश्याम प्रभो सादरम् ॥

गोपस्त्रियः व्रतमनुष्ठाय तज्जनितं हर्षमाविष्कुर्वन्ति—கூடாரை வெல்லும் சீர் इति ।

२७ हे शत्रुञ्जय गोपते प्रिय विभो स्तुत्वा वयं त्वां मुहुः
प्राप्स्येमान् पटहान् बहून् बहुमतिं लप्स्यामहे चोत्तमाम् ।
वस्त्राण्यङ्गदकर्णपत्रकटकान् धृत्वा ततः सङ्गताः
स्वाद्वन्नं घृतदुग्धपूरभरितं भोक्ष्यामहे च त्वया ॥

परिसमाप्तव्रतगोपिकाः भगवति अपराधक्षापणं कुर्वन्ति—கறவைகள் பின் சென்று इति ।

२८ गोवृत्त्यैव हि जीवतामहरहः गोपालकानां कुले
येन प्रादुरभूस्त्वमेतदुचितं पुण्यं समृद्धं हि नः ।
अस्माभिः प्रिय कृष्ण गोपतनयेत्याहूयमानोऽसकृत्
मन्युं मा कुरु चास्मदिष्टमखिलं सद्यः प्रयच्छ प्रभो ॥

एतावता ऐहिकसुखानि संप्रार्थ्य संप्रति स्वाभिलषितमामुष्मिकसुखं याचन्ते—சிற்றஞ்சிறுகாலே इति ।

२९ कृष्ण प्रातरिहागतैस्तव जनैराविद्यमानं शृणु
प्राग्दत्तैरिह वाद्यचामरसुखैर्न स्याम तुष्टाः प्रभो ।
किन्त्वल्पान् सहजात्मपोष्य विषयान् सांसारिकान् सर्वदा
कैङ्कर्यं करवाम तेऽङ्घ्रिकमले कुर्या दयां नस्तथा ॥

तिरुप्पावै ग्रन्थपठनस्य फलं ब्रूते—வங்கக் கடல் கடைந்த इति

३० त्रिंशद्गाथामयीं चेमां कृतिं योऽनुस्मरेद्बुधः ।
रक्तान्तलोचनः कृष्णस्तनुते तस्य मङ्गलम् ॥

---

१ तुलसीकाननोद्भूतां विष्णुचित्तसुतां शुभाम् ।
रङ्गनाथस्य महिषीं गोदां वन्दे निरन्तरम् ॥

२ संप्रदायविदामत्र वक्तव्यं बहु शिष्यते ।
विशिष्टभावविस्पष्टज्ञानहेतुरियं कृतिः ॥

३ वरदार्यगुरोः सूनुः वात्स्यः श्रीरामदेशिकः ।
'शिरुकुट्टूर्' ग्रामवर्ये जातः साहित्यमर्मवित् ॥

४ वेदान्तदेशिकमणिशतकस्य शिरोमणिः ।
प्रणेता भगवत्कृष्णकथासंग्रहतत्कृतेः ।

५ व्यतानीत् श्लोकरूपेण गोदादेव्याः कृतिं शुभाम् ॥

वृषमाचलनाथस्य करुणापरिणामतः ।
६ श्रीवीरराघवार्याणामुत्तमूर्चक्रवर्तिनाम् ॥
सर्वशास्त्रप्रवीणानामन्तेवासी ह्ययं जनः ।
७ यत्कृपावीक्षणादेषः लेभे तत्त्वार्थसम्पदम् ॥
श्रीवीरराघवार्याय तस्मै श्रीगुरवे नमः ।

इति श्रीरामदेशिकशिरोमणिरचिताः
तिरुप्पावै श्लोकाः
सम्पूर्णाः ।